Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வியாழக்கிழமை, செப்டம்பர் 02, 2021 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 50

## தமிழக அரசு வழிகாட்டு நெறிமுறைகளுடன் காஞ்சீபுரம் மாவட்டத்தில் 239 பள்ளிகள் திறப்பு: மாவட்ட கலெக்டர் டாக்டர் மா. ஆர்த்தி பார்வையிட்டு ஆய்வு



காஞ்சீபுரம், செப்டம்பர் 02 2021: தமிழக அரசு வழிகாட்டு நெறிமுறைகளுடன் காஞ்சீபுரம் மாவட்டத்தில் 239 பள்ளிகள் திறக்கப்பட்டது. சின்ன காஞ்சீபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில், மாவட்ட கலெக்டர் டாக்டர் மா.ஆர்த்தி பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

காஞ்சீபுரம் வருவாய் மாவட்டத்திலுள்ள அனைத்து வகை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 9, 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கு

பள்ளியானது தமிழக அரசு வழிகாட்டு நெறிமுறைகளுடன் செப்டம்பர் 1-ஆம் தேதி முதல் தொடங்கியது. பள்ளியில் நுழையும் முன் மாணவர்களுக்கு உடல் வெப்ப பரிசோதனை முககவசம் கிருமி நாசினிகள் அனைத்தும் வழங்கப்பட்டு வகுப்புகளில் 20 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

மாவட்ட கலெக்டர் ஆய்வு: சின்ன காஞ்சிபுரம் பி.எம்.எஸ் அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட கலெக்டர் டாக்டர் மா.ஆர்த்தி நேரில் சென்று பள்ளியில் மேற்கொண்டுள்ள கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். பிறகு பள்ளி வகுப்பறைக்கு சென்ற மாவட்ட கலெக்டர், மாணவிகளிடம், சமூக இடைவெளியை கட்டாயம் கடைபிடிக்க வேண்டும். முக கவசத்தை சரியான முறையில் அணிந்து கொள்ள வேண்டும், கிருமிநாசினி கொண்டு கைகளை சுத்தம் செய்ய வேண்டும், ஊட்டச்சத்து அதிகமுள்ள சத்தான உணவுகளை சாப்பிட வேண்டும், உடல்நிலை சரியில்லை என்றால் உடனடியாக வகுப்பாசிரியரிடம் கூறினால், உங்களுக்கு உடனடியாக மருத்துவ பரிசோதனை செய்து சிகிச்சை அளிக்கப்படும், உள்ளிட்ட அறிவுறைகளை வழங்கினார். அப்போது அவருடன் தமிழக தொடக்கக்கல்வித் துறை இயக்குனர் பழனிச்சாமி, காஞ்சிபுரம் மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி அருள்செல்வன், பள்ளி கல்வித்துறை துணை ஆய்வாளர் சிவக்குமார், பள்ளித் தலைமை ஆசிரியர் த.கோமதி ஆகியோர் உடன் இருந்தனர்.

பிறகு மாவட்ட கலெக்டர் கூறியதாவது: காஞ்சீபுரம் மாவட்டத்தில் மொத்தமுள்ள 239 அரசு, நிதியுதவி, தனியார் பள்ளிகளில், 102 அரசு உயர்நிலை

மற்றும் மேல்நிலைப்பள்ளிகள், 20 அரசு நிதியுதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகள், 4 சுயநிதி உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் 60

மெட்ரிக் உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் 53 சிபிஎஸ்ஸி மற்றும் இதர வாரியப் பள்ளிகள் இன்று திறக்கப்பட்டது. ஒரு வகுப்பறைக்கு 20 மாணவர்கள் வீதம் அமர வைக்கப்பட்டுள்ளனர். அனைத்து பள்ளிகளிலும் கோவிட் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி பள்ளிகள் செயல்படும். அனைத்து பள்ளியின் ஆசிரியர்கள், மாணவர்கள் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும். சமூக இடைவெளி பின்பற்ற வேண்டும்.

பள்ளிகளில் அனைவரும் அடிக்கடி கை கழுவ சோப்பு மற்றும் சானிடைசர் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மாணவர்கள் பள்ளிகளில் நுழையும் முன்பு உடல்

வெப்பநிலை ஆய்வு செய்து பள்ளியினுள் அனுமதிக்கப்பட்டனர். அரசு பள்ளியில் 41023 மாணவர்களும், மெட்ரிக் பள்ளிகளில் 19000 மாணவர்களும், இதர வாரிய பள்ளிகளில் 12110 மாணவர்களும் ஆக மொத்தம் 72133 மாணவர்கள் பள்ளிக்கு வருகை புரிய உள்ளார்கள். இதில் வகுப்பறைக்கு 20 மாணவர்கள் என அமர வைப்பதால், போதுமான வகுப்பறைகளுடன் முழுவதுமாக 910,21, மற்றும் 12 வகுப்புகள் செயல்படும் பள்ளிகள் எண்ணிக்கை 182, சுழற்சி முறையில் 57

பள்ளிகளும் செயல்பட உள்ளது. அனைத்து பள்ளிகளிலும், பள்ளி தொடங்கிய முதல் வாரத்தில் அனைத்து மாணவர்களுக்கும் உடல் பரிசோதனை செய்ய முகாம் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. அனைத்து பள்ளிகளிலும் பள்ளிவளாகம் மற்றும் வகுப்பறைகள் தூய்மை செய்யப்பட்டு கிருமி நாசினி தெளிக்கப்பட்டு மாணவர்கள் பாதுகாப்பாக கற்றல் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் அனைவரும் கோவிட் தடுப்பூசி கட்டாயம் எடுத்துக் கொண்டு இருக்கவேண்டும். என அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது. என அவர் தெரிவித்தார்.

## அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வத்தின் மனைவி விஜயலட்சுமி உடலுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று அஞ்சலி

### எடப்பாடி பழனிசாமி, சசிகலா, உள்ளிட்ட தலைவர்கள் நேரில் அஞ்சலி

சென்னை செப் 02 2021: அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வத்தின் மனைவி விஜயலட்சுமி கடந்த சில நாட்களாக உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டு இருந்தார்.

சென்னை பெருங்குடியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அவர் சிகிச்சைக்காக கடந்த 22-ந்தேதி அனுமதிக்கப்பட்டார். அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வந்தனர்.

நேற்று காலை விஜயலட்சுமிக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டது. அவரை காப்பாற்ற டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தனர். என்றாலும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

அதிமுக ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் துணை முதலமைச்சருமான ஓ.பன்னீர்செல்வத்தின் மனைவி விஜயலட்சுமி (63) மாரடைப்பால் நேற்று காலமானார். அவரது மறைவுக்கு அரசியல் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.







இந்த நிலையில், பெருங்குடியில் உள்ள தனியார் மருத்துவமனையில் உயிரிழந்த ஓ.பன்னீர்செல்வத்தின் மனைவி விஜயலட்சுமி உடலுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் அமைச்சர்கள் துரைமுருகன், தங்கம் தென்னரசு, சேகர் பாபு, மா.சுப்பிரமணியன் மற்றும் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்டோரும் அஞ்சலி செலுத்தினர்.

அஞ்சலி செலுத்திய பின், மனைவியை இழந்து வாடும் ஓ.பன்னீர்செல்வத்துக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆறுதல் கூறினார்.

முன்னதாக அதிமுக இணை ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி மருத்துவமனைக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

மருத்துவமனையில் உள்ள விஜயலட்சுமி உடலுக்கு சசிகலா நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

பின்னர், ஓ.பன்னீர்செல்வம் மற்றும் குடும்பத்தினரை சந்தித்து சசிகலா ஆறுதல் கூறினார். அப்போது, ஓ.பன்னீர்செல்வம் கண்கலங்கிய நிலையில் காணப்பட்டார்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி
நிருபர்கள் தேவை
தமிழகமெங்கும் காலையில் வெளிவரும் ஹலோ மிரர் மெட்ராஸ் நாளிதழுக்கு மாவட்டம். தாலுகா பகுதி நகர வாரியாக அனுபவமுள்ள நிருபர்கள் தேவை
தொடர்புக்கு : 8148231942
hellomadrasdaily@gmail.com

## சென்னை அண்ணா சாலையில் கருணாநிதிக்கு சிலை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை செப் 02 2021: பல்வேறு தரப்பினர் கோரிக்கை வைத்த நிலையில், அண்ணா சாலையில் கருணாநிதிக்கு சிலை வைக்கப்படும் என்ற அறிவிப்பை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டு உள்ளார்.

அண்ணா சாலையில் கருணாநிதிக்கு சிலை- மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை அண்ணா சாலையில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதிக்கு சிலை அமைக்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சட்ட வல்லுநர்களை ஆலோசித்து சென்னை அண்ணா சாலையில் ஏதாவது ஒரு இடத்தில் கலைஞர் கருணாநிதிக்கு சிலை வைக்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

தி.க. தலைவர் வீரமணி உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் கோரிக்கை வைத்த நிலையில் சட்டசபையில் முதலமைச்சர் இந்த அறிவிப்பை வெளியிட்டு உள்ளார்.



## மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்த கடன் வாங்கினோம் முன்னாள் அமைச்சர் சிவி. சண்முகம் ஆவேசம்

விக்கிரவாண்டி, செப்டம்பர் 02 2021: தமிழக மக்களுக்கு நலத்திட்டங்களை செயல்படுத்த அ.தி.மு.க., ஆட்சியில் கடன் வாங்கினோம் .தி.மு.க., ஆட்சியில் கடன் வாங்கியதை கூறி ஏன் திட்டங்களை செயல்படுத்தாமல் மக்களை ஏமாற்றுகிறீர்களா? முன்னாள் அமைச்சர் சண்முகம் ஆவேசம்

விக்கிரவாண்டி வடக்கு ஒன்றிய அ.தி.மு.க., சார்பில் உள்ளாட்சி தேர்தல் பணிகள் குறித்து கஞ்சனூரில் நடந்த ஆலோசனை கூட்டத்தில் வடக்கு ஒன்றிய செயலாளர் எசாலம் பன்னீர் வரவேற்றார். கூட்டத்திற்கு தலைமை தாங்கி முன்னாள் அமைச்சரும், மாவட்ட செயலாளர் சண்முகம் பேசியதாவது.

கடந்த ஆட்சியில் கிராமபுற பெண்கள் முன்னேற முன்னாள் முதல்வர் ஜெ., ரூபாய் 1500 கோடி திட்டத்தில் மகளிருக்கு வழங்கிய கறவைமாடு, ஆடு, கோழி வழங்கும் திட்டமும், பெண்கள் வேலைக்கு எளிதாக சென்று வர அம்மா ஸ்கூட்டி திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் தி.மு.க., ஆட்சியில் முடக்கப்பட்டுள்ளது. தேர்தலில் மக்களிடம் பொய் வாக்குறுதிகளை அள்ளி வீசி வெற்றி பெற்ற தி.மு.க., வெற்றி பெற்ற பிறகு திட்டங்களை செயல்படுத்த முடியாது. அ.தி.மு.க., ஆட்சியில் கடன்கள் அதிகம் வாங்கியுள்ளது என கூறி வருகின்றனர் .

அ.தி.மு.க., ஆட்சியில் கடன்கள் வாங்கி மக்களுக்கு தேவையான நல்ல பல திட்டங்களை செய்துள்ளோம். ஏழை எளிய மாணவர்கள் உயர்கல்வி பயில 35 லட்சம் மாணவர்களுக்கு மடி கணணி வழங்கியுள்ளோம். இந்த திட்டத்தினையும் தி.மு.க., முடக்க திட்டமிட்டுள்ளது என தெரிகிறது. கடந்த 4 மாத கால ஆட்சியில் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாததால் தி.மு.க., மீது மக்கள் வெறுப்பாக உள்ளனர்.

வருகின்ற உள்ளாட்சி தேர்தலில் அ.தி.மு.க., அனைத்து அணி நிர்வாகிகள், தொண்டர்கள் ஒற்றுமையுடன் தேர்தல்



பணியில் ஈடுபட்டு,மக்கள் மத்தியில் அ.தி.மு.க., ஆட்சியில் செய்த திட்டங்களை எடுத்து கூற வேண்டும் . உள்ளாட்சி தேர்தலில் அ.தி.மு.க., பெருமான்மையான வெற்றி பெறுவது உறுதியாகும் . இவ்வாறு அமைச்சர் சண்முகம் பேசினார்.

மாநில பொதுக்குழு உறுப்பினர் லட்சுமி நாராயணன், ஒன்றிய தலைவர் பழனி, நகர செயலாளர் பூர்ணராவ், ஒன்றிய துணை செயலாளர் குமார் , ஒன்றிய அணி செயலாளர்கள் ஜெ., பேரவை சரணவக்குமார், எம்.ஜி.ஆர் மன்றம் ரவி, இலக்கிய அணி துரை முருகன், மாணவரணி திருநாவுக்கரசு, இளைஞரணி வாசு பிரகாஷ், இளைஞர் பாசறை செந்தில்குமார், கண்ணன், பேரவை இணை செயலாளர் பெரியான் , தொழில்நுட்பபிரிவு அந்துவான், இணை செயலாளர் ஸ்ரீதர் , மகளிரணி பிரபாவதி, மாவட்ட பிரதிநிதி கிருஷ்ணன்,ராயர் , அஞ்சலை, அய்யாசாமி மற்றும் அனைத்து கிளை செயலாளர்கள் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

விக்கிரவாண்டி வடக்கு ஒன்றிய அ.தி.மு.க., நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட செயலாளர் சண்முகம் பேசினார். அருகில் ஒன்றிய செயலாளர் எசாலம் பன்னீர்.

## உள்ளாட்சி தேர்தலை முன்னிட்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் வெளியீடு: மாவட்ட கலெக்டர் டாக்டர் மா. ஆர்த்தி வெளியிட்டார்

காஞ்சீபுரம், செப்டம்பர் 02 2021: காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள மக்கள் நல்லுறவு கூட்ட அரங்கில் 2021 ஆம் ஆண்டு நடைபெற உள்ள ஊரக உள்ளாட்சி தேர்தலை முன்னிட்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட கலெக்டருமான டாக்டர் மா.ஆர்த்தி, அனைத்து அங்கீகரிக்கப்பட்ட கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் வெளியிட்டார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் ஸ்ரீதேவி முதல் பிரதியை பெற்றுக் கொண்டார். பிறகு மாவட்ட கலெக்டர் டாக்டர் மா.ஆர்த்தி கூறியதாவது: இந்திய தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்டுள்ள சட்டமன்ற தொகுதி வாரியான வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு



உள்ளாட்சித் தேர்தலுக்கான மறுவரையறை செய்யப்பட்ட வார்டுகளின் வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. காஞ்சீபுரம் மாவட்டத்தில் 5 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உள்ளாட்சித் தேர்தல் நடைபெற உள்ளது. இந்த ஊரக உள்ளாட்சி தேர்தலில் வாக்குச்சீட்டுகள் பயன்படுத்த உள்ளன. ஊராட்சி ஒன்றியங்களில் அமைக்கப்பட்டுள்ள 1281 வாக்குச் சாவடிகளில் வாக்குப் பதிவு நடைபெற உள்ளது.

தற்பொழுது காஞ்சீபுரம் ஒன்றியத்தில் 51,127 ஆண் வாக்காளர்களும், 54,705 பெண் வாக்காளர்களும் மற்றும் இதரர் 12 வாக்காளர்கள். வாலாஜாபாத் ஒன்றியத்தில் 50,710 ஆண் வாக்காளர்களும் 54,831 பெண் வாக்காளர்களும் மற்றும் இதரர் 7 வாக்காளர்கள். உத்தரமேரூர் ஒன்றியத்தில் 50,993 ஆண் வாக்காளர்களும் 53,423 பெண் வாக்காளர்களும் மற்றும் இதரர் 7 வாக்காளர்கள். ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்தில் 44,387 ஆண் வாக்காளர்களும் 48,964 பெண் வாக்காளர்களும் மற்றும் இதரர் 11 வாக்காளர்கள். குன்றத்தூர் ஒன்றியத்தில் 1,34,049 ஆண் வாக்காளர்களும் 1,38,464 பெண் மற்றும் இதரர் 41 வாக்காளர்கள். என காஞ்சீபுரம் மாவட்டத்தில் மொத்தம் 6,81,731 வாக்காளர்கள் உள்ளனர் இதில் ஆண்கள் 3,31,266 பெண்கள் 3,50,387 மற்றும் இதரர் 78 வாக்காளர்கள் உள்ளனர். மேலும் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு வேட்புமனு தாக்கல் செய்யப்படும் இறுதிநாள் வரை வாக்காளர் பட்டியலில் வாக்காளர் பெயர் சேர்த்தல் நீக்கல் தொடர்பான விவரங்கள் வருவாய்த் துறையினரிடம் இருந்து பெறப்பட்ட மாற்றங்கள் மேற்கொள்ளப்படும். என அவர் தெரிவித்தார்.

அப்போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் ஸ்ரீதேவி, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (உள்ளாட்சித் தேர்தல்) ஸ்டீபன் ஜெயச்சந்திரா, வட்டார வளர்ச்சி அலுவலர் (தேர்தல்) தினகரன் மற்றும் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட கட்சி பிரதிநிதிகள் உடன் இருந்தனர்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# கிருஷ்ணா ஜெயந்தி விழா



**தேனி, செப்டம்பர் 02 2021: தேனி மாவட்டம் பெரியகுளம் மற்றும் ஒன்றிய பகுதிகளில் குழந்தைகளுக்கு கிருஷ்ணன் வேடம் பல நிலைகளில் வேடமிட்டு கிருஷ்ண பகவானை வழிபட்டனர். துளசி அம்மன் கோவில், ஹரே ராம ஹரே கிருஸ்ணா, தென்கரை யாதவ சமுதாய கூடத்தில் பொங்கலிட்டு வழிபட்டனர். .வடகரை யாதவ சமுதாயம் இளையஞரணி சார்பாக சுண்டல், பொங்கல், வெண்பொங்கல் இறைவனிடம் படையலிட்டு பொதுமக்களுக்கு வழங்கினர். குழந்தைகளுக்கு பல விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன.**






**வேங்கடமங்கலம்: அம்மா பல்கலைக்கழகத்தை அண்ணாமலை பல்கலைக்கழகத்துடன் இணைக்கும் திமுக அரசை கண்டித்து செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் ச.இராசேந்திரன் வழிகாட்டுதல்படி காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் எம்.கஜா என்கின்ற கஜேந்திரன் தலைமையில் வேங்கடமங்கலத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் அதிமுக நிர்வாகிகள் வேங்கடமங்கலம் ரவி, மண்ணிவாக்கம் சாந்தி புருஷோத்தமன், கிளைக் கழகச் செயலாளர் வேலு, குமிழி ஜான்சன், கார்த்திக், காட்டாங்குளத்தூர் கனி என்கின்ற கணேஷ் ,நா.சண்முகசுந்தரம், உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் கலந்துகொண்டு கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**



**மறைமலைநகர்: அம்மா பல்கலைக்கழகத்தை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கும் திமுக அரசை கண்டித்து மேற்கு மாவட்ட அதிமுக செயலாளர் சிட்லபாக்கம் ச. இராசேந்திரன் வழிகாட்டுதல்படி மாவட்ட அம்மா பேரவை செயலாளர் மறைமலைநகர் எம்.ஜி.கே.கோபிகண்ணன் தலைமையில் மறைமலைநகரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் அம்மா பேரவை நகர செயலாளர் அர்.தசரதன், நகர அவைத்தலைவர் பி.காளி, அமைப்பு சாரா ஓட்டுநர்கள் அணி மாவட்ட இணைச்செயலாளர் எல். பார்த்தசாரதி, கீழ்கரணை ஆர். வினோத்குமார் மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் ஜெயந்தி, கஜலட்சுமி, தேவி, உமா உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் கலந்துகொண்டு தங்கள் கண்டனத்தை தெரிவித்தனர்.**



**தமிழகம் முழுவதும் கல்லூரிகள் திறக்கப்பட்டதால் மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி மாணவ-மாணவிகள் ஆர்வத்துடன் கல்லூரிக்குள் செல்கின்றனர்.**

# மாவட்ட அளவிலான ஊட்டச்சத்து மாத துவக்க விழா மாவட்ட ஆட்சியர் அனீஸ் சேகர் குத்துவிளக்கேற்றி துவக்கி வைப்பு

*மதுரை, செப்டம்பர் 02 2021:* மதுரை மாவட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் சார்பாக ஊட்டச்சத்து மாத துவக்க விழா நடைபெற்று வருகிறது.



அதன் துவக்க நிகழ்ச்சி மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அணிஷ் சேகர் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித் தலைவர் அனிஷ் சேகர் மாவட்ட வருவாய் அலுவலர் செந்தில்குமாரி குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்து வாழ்க்கையின் ஆரோக்கிய பயணத்தை நோக்கி அனைவரும் ஒன்றிணைவோம் என்ற தலைப்பில் கையெழுத்து இயக்கத்தை துவக்கி வைத்தார்.

அதை தொடர்ந்து அங்கன்வாடி பணியாளர்கள் வாழ்க்கையின் ஆரோக்கிய பயணத்தை நோக்கி அனைவரும் ஒன்றிணைவோம் என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

மேலும் சமூக நலன் மற்றும் மக்களை உரிமை துறை உரிய அந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் சார்பாக இடம்பெற்ற கண்காட்சியில் ஊட்டச்சத்து சம்பந்தமான பொருட்கள் வைக்கப்பட்டு இருந்தது.

அதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அனீஸ் சேகர் அலுவலக வளாகத்தில் மரக்கன்றுகள் நட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினார், அதனைத் தொடர்ந்து அங்கன்வாடி பணியாளர்களின் கலை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

# சாத்தூர் நகர காங்கிரஸ் கமிட்டி சார்பில் மாமன்னர் பூலித்தேவன் 306 வது பிறந்தநாள் விழா

*சாத்தூர், செப்டம்பர் 02 2021:* மாமன்னர் பூலித்தேவன் அவர்களின் 306 வது பிறந்தநாள் விழா சாத்தூர் அண்ணாநகரில்,



நகர காங்கிரஸ் கமிட்டி சார்பாக சிறப்பாக கொண்டாடப்பட்டது. சாத்தூர் நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் அய்யப்பன் தலைமை வகித்தார் . விருதுநகர் மேற்கு மாவட்ட பொதுச்செயலாளர் ஜோதி நிவாஸ் ,மாவட்ட செயலாளர் சந்திரன்,கிழக்கு வட்டார தலைவர் சுப்பையா,லட்டு கருப்பசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். பூலித்தேவன் திருவுருவப்படத்திற்கு விருதுநகர் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி துணைத்தலைவர் அரசன் கார்த்திக் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர், ஏழை எளியவர்களுக்கு இலவச அரிசி பைகளை வழங்கினார். மேலும் , தமிழ்நாட்டின் பாரம்பரிய வீர விளையாட்டான சிலம்பம் விளையாட்டை நினைவுபடுத்தும் வகையில் பூலித்தேவர் திருவுருவ படத்திற்கு முன்பு சிறுவர்கள் சிலம்பம் விளையாடி வீரவணக்கம் செலுத்தினார்கள். சாத்தூர் சட்டமன்ற தொகுதி இளைஞர் காங்கிரஸ் தலைவர் கும்கி கார்த்திக், சிலம்பாட்ட சிறுவர்களுக்கு புலித்தேவர் பிறந்தநாள் நினைவாக டிபன்பாக்ஸ் பரிசு வழங்கினார். சாத்தூர் ஒன்றிய செயலாளர் ரமேஷ். மேற்கு வட்டார துணைத்தலைவர் ஒத்தையால் முத்துவேல், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பழனிகுமார், பார்வர்டு பிளாக் ஒன்றிய செயலாளர் தங்கப்பாண்டியன், சிறுபான்மைப் பிரிவு மாநில ஒருங்கிணைப்பாளர் செய்யது இப்ராஹிம், வட்டாரச் செயலாளர் சத்திரப்பட்டி லட்சுமணன், நகர பொதுச்செயலாளர் ரவி, நகர துணைத் தலைவர் சின்னப்பன். நகர இளைஞரணி தலைவர் சதாம் உசேன்,மாவட்ட செயற்குழு உறுப்பினர் வெள்ளைச்சாமி, சாத்தூர் நகர மாணவரணி தலைவர் சங்கர் பாண்டியன், ஒன்றிய மாணவரணி தலைவர் மணிவண்ணன், படந்தால் ராகுல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஒன்றரை வருடங்களுக்குப்பின் செயல்பட துவங்கிய பள்ளிகள் - தெர்மல் ஸ்கேனர், சானிடைசர் பரிசோதனைக்கு பின்னரே மாணவிகள் அனுமதிப்பு

*மதுரை, செப்டம்பர் 02 2021:* கொரானா பெருந்தொற்று காரணமாக பள்ளிகள் மூடப்பட்டு இருந்த நிலையில் 9 10 11 12 ஆகிய வகுப்புகளுக்கு அரசு வழிகாட்டு நெறிமுறைகளுடன் அனைத்து பள்ளிகளும் செயல்படலாம் என்று தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.



அந்த வகையில் தமிழகத்திலுள்ள அனைத்து பள்ளிகளிலுள்ளவகுப்புகள் கிருமிநாசினி மூலம் சுத்தம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து இன்று மாணவ-மாணவிகள் முகக்கவசம் அணிந்து பள்ளிக்கு வர துவங்கியுள்ளனர். அதன் ஒரு பகுதியாக மதுரையில் மீனாட்சி சுந்தரேசுவரர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி நிர்மலா பெண்கள் மேல்நிலைப் பள்ளி சௌராஷ்டிரா ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, தியாகராஜர் மாடல் மேல்நிலைப்பள்ளிஉள்ளிட்ட சுற்றுப்புற பகுதியில் உள்ள பள்ளிகளில்மாணவ மாணவிகள் முகக்கவசம் அணிந்து கல்வி கற்க வருகை புரிந்துள்ளனர்.

மாணவ மாணவிகளுக்கு பள்ளிகளில் தெர்மல் ஸ்கேனர் மூலம் பரிசோதனை செய்யப்பட்டு சனிடைசர் மூலம் கைகள் சுத்தம் செய்யப்பட்டு பின்னரே வகுப்பிற்குள் அனுமதிக்கப்படுகின்றனர். வகுப்பறையில் பாடம் நடத்துவதற்கு முன் ஆசிரியர்கள் மாணவ மாணவிகளுக்கு கொரானா பற்றி விழிப்புணர்வு அறிவுரை செய்த பின்னரே பாடம் நடத்துகின்றனர்.

# காஞ்சிபுரத்தில் அண்ணா தொழிற் சங்க பேரவை போக்குவரத்து பிரிவு தேர்தல் ஆலோசனை கூட்டம்

*காஞ்சீபுரம், செப்டம்பர் 02 2021:* காஞ்சீபுரம் மண்டலத்திற்கு அண்ணா தொழிற் சங்க பேரவை போக்குவரத்து பிரிவு தேர்தல் ஆலோசனை கூட்டம் காஞ்சிபுரம் பஸ் நிலையம் அருகே உள்ள தனியார் தங்கும் விடுதியில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு கழக அண்ணா தொழிற் சங்க பேரவை தலைவர் தாடி மா.ராசு தலைமை வகித்தார்.



கழக அண்ணா தொழிற் சங்க பேரவை செயலாளர் கமலக்கண்ணன் கலந்து கொண்டு தொழிற்சங்க தேர்தல் குறித்து ஆலோசனை வழங்கினார்.அப்போது அவர் கூறியதாவது:

அண்ணாதிமுக ஆட்சியில் நமது தமிழக முன்னாள் முதல்வர் எடப்பாடி கே.பழனிச்சாமி, முன்னாள் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், ஆகியோர் போக்குவரத்து தொழிலாளர்களுக்கு சலுகைகளை வழங்கி அவர்கள் குடும்பத்தினர் வாழ்வில் ஒளி விளக்கேற்றினார்கள், மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில் தான் அரசு கட்டணம் குறைவாக இருந்தது. வருகிற உள்ளாட்சி தேர்தலில் அண்ணாதிமுக வெற்றி பெற பாடுபட வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர்கள் பா. பெஞ்சமின், பி.வி.ரமணா, மாதவரம் மூர்த்தி, மாவட்ட கழக செயலாளர்கள் சிட்லபாக்கம் ச.ராசேந்திரன், வி.சோமசுந்தரம், திருக்கழுக்குன்றம் எஸ். ஆறுமுகம், சிறுணியம் பி.பலராமன், வி.அலெக்சாண்டர், கழக அமைப்புச் செயலாளரும் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான வாலாஜாபாத் பா.கணேசன், அனைத்துலக எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர் காஞ்சி பன்னீர்செல்வம், தாம்பரம் நகர கழக செயலாளர் தாம்பரம் எம்.கூத்தன், ஒன்றிய செயலாளர்கள் திருப்புலிவனம் கே.பிரகாஷ் பாபு, களியாம்பூண்டி தங்கபஞ்சாட்சரம், கே.ஆர்.தருமன்,

தும்பவனம் டி.ஜீவானந்தம், களக்காட்டூர் ராஜீ, மாவட்ட மாணவரணி செயலாளர் திலக் குமார், மாவட்ட கழக துணை செயலாளர் கூடுவாஞ்சேரி டி.சீனிவாசன், கூடுவாஞ்சேரி பேரூராட்சி கழக செயலாளர் எஸ்.டி.பிரசாத், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு செயலாளர் சம்பத், அரசு வழக்கறிஞர் ஜெ.காமேஷ்குமார், மாவட்ட கழக பொருளாளர் பி.கே.பரசுராமன், அரசு வழக்கறிஞர் போந்தூர் இளவரசு, மாவட்ட அம்மா பேரவை இணை செயலாளர் கோல்டு ரவி, தொழிற்சங்கத்தை சேர்ந்த எஸ்.இ.பம்பாய், காஞ்சிபுரம் மண்டல அண்ணா தொழிற் சங்க தலைவர் வெங்கடபதி, செயலாளர் சங்கரன், பொருளாளர் வேணுகோபால், ஒரிக்கை மண்டல துணை தலைவர் கிருஷ்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



**கன்னியாகுமரி:** கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலுவலராக அ.சிவப்பிரியா *(01.09.2021)* பொறுப்பேற்றுக் கொண்டார்கள் .

# ஊத்தங்கரை இந்தியன் வங்கி எதிரில் நோய் தொற்று பரவும் அபாயம்

*கிருஷ்ணகிரி, செப்டம்பர் 02 2021:* கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை காந்தி சாலையில் அமைந்துள்ள இந்தியன் வங்கி கிளையில் ஆகஸ்ட் 31-ஆம் தேதி காலை கோவில் திருவிழா போல கூட்டம் அலைமோதியது தமிழக அரசு சார்பில் கொரோன வைரஸ் பரவலை தடுக்கும் விதமாக பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் அமலில் உள்ள நிலையிலும் வங்கி நிர்வாகம் கண்டு கொள்ளாமல் வங்கி வாடிக்கையாளர்களை ஆடுமாடுகள் போன்று கூட்டம் கூட்டமாக நிற்க வைத்து நோய் பரவுவதற்கு ஏதுவாக வழிவகை செய்துள்ளனர். இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் கொரோனா நோய்த் தொற்று பரவல் அதிகமாக இருக்கும். இந்த தருணத்தில் இதுபோன்ற கூட்டம் கூடுவதை தவிப்பதற்கு வங்கி மேலாளர்களுக்கு தகுந்த அறிவுரை மற்றும் ஆலோசனை வழங்க வேண்டும். எனவும் அவர்களுக்கு மாவட்ட நிர்வாகம் ஒரு சுற்றறிக்கையின் மூலம் வங்கி மேலாளர்களுக்கு உடனடியாக அனுப்பி நடவடிக்கை எடுக்க வேண்டும்.




என பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.



*கிருஷ்ணகிரி, செப்டம்பர் 02 2021:* கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட திமுக செயலாளர் ஒசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய். பிரகாஷின் மகன் ஒய்.பி. கருணா சாகர் பெங்களூர் அருகே நிகழ்ந்த கோரமான சாலை விபத்தில் சிக்கி இயற்கை எய்தினார். தகவல் அறிந்து திமுக முதன்மை செயலாளரும் தமிழ்நாடு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு, திமுக இளைஞர் அணி செயலாளர் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ். உதயநிதி ஸ்டாலின், எம்.எல்.ஏ கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தமிழக வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே பன்னீர் செல்வம், திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி' அணைகட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நந்தகுமார் எம்.எல்.ஏ, கர்நாடகா கே.பி.சி.சி. தலைவர் டி.கே. சிவகுமார், நாடாளுமன்ற எம்பி டி.கே. சுரேஷ் ஆகியோர் பங்கேற்று இறுதி அஞ்சலி செலுத்தினர்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி





தேனி: தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே எருமலைநாயக்கன்பட்டியில் ஊராட்சித்தலைவர் தலைமையில் செயல் அலுவலர் முன்னிலையில் சுமார் 200 நபர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் முகக்கவசம், சமூக இடைவெளி, கை கழுவுதல் கடைபிடிக்கப்பட்டது. சுகாதார பணியாளர்களும், துப்புரவு தொழிலாளர்களும் கலந்து கொண்டனர் .அனைவர்க்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.



தேனி: தேனி மாவட்டம், பெரியகுளம் அருகே வடுகபட்டி பேரூராட்சியில் திராவிட முன்னேற்ற கழக பேரூராட்சி தலைவர் விஸ்வம் தலைமையில் செயல் அலுவலர் அம்புஜம் முன்னிலையில் தேவதானப்பட்டி ஆரம்ப சுகாதார மருத்துவ குழுவினரும் சுகாதர பணியாளர்களும் (சுப்புராஜ்) சுமார் 200க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டது.

DTP
DESIGN
All Online Services
8144337349



குமரி, செப்டம்பர் 02 2021: குமரிமாவட்டத்தில் ஒன்றரை ஆண்டுகளுக்கு பிறகு பள்ளிகள்,கல்லூரிகள் திறக்கப்பட்டு உள்ளதால் மாணவர்கள் ஆர்வமுடன் வருகை-மாவட்டம் முழுவதும் 483 அரசு மற்றும் தனியார் பள்ளிகள் திறப்பு-குமரி மாவட்ட பள்ளியில் படிக்கும் கேரள மாணவர்களுக்கு அனுமதியில்லை-மேலும் கல்லூரி மாணவர்கள் 2 டோஸ் தடுப்பூசி செலுத்தினால் மட்டுமே கல்லூரிக்குள் அனுமதி.



மயிலாடும்பாறை: மயிலாடும்பாறை ஊராட்சியில் கொரானோ தடுப்பு நடவடிக்கையாக பள்ளிகள் இயக்க விருக்கும் நிலையில் ஜீ.ஆர்.வி. மேல்நிலைப் பள்ளி ஊராட்சி ஒன்றிய உயர் நிலைப்பள்ளிகளில் வகுப்பறைகள் அலுூவலகங்களில் சுத்தம் செய்து கிரிமி நாசினி தெளிக்கும் பணியினை ஊராட்சி தலைவர் ஏ. பார்வதி அன்பில் சுந்தர பாரதம் பார்வையில் பள்ளி தலமை ஆசிரியர்கள் முன்னிலையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# வருஷநாடு பஞ்சம்தாங்கி மலையில் தொடரும் காட்டு தீ பொதுமக்கள் அச்சம் கட்டுப்படுத்துமா வனத்துறை

வருஷநாடு, செப்டம்பர் 02 2021: கடமலை மயிலை ஒன்றியம் வருசநாடு அருகே உள்ள பஞ்சம்தாங்கி மலை சதுரகிரி மலைத் தொடர்ச்சி ஆகும் இந்த மலை இப்பகுதி மக்களின் அன்றைய பஞ்சத்தை போக்கியதால் இந்த மலைக்கு பஞ்சம்தாங்கி மலை என்ற பெயர் ஏற்பட்டுள்ளது. இந்த மலையில் கடந்த ஒரு மாதமாக விட்டு விட்டு காட்டுத்தீ பரவுவதால் பொதுமக்கள் மிகுந்த அச்சத்தில் உள்ளனர். நக்சலைட்டுகள் ஊடுருவலா அல்லது சமூக விரோதிகளின் செயலா மரம் கடத்தும் வோர் மற்றும் அடுப்புக்கரி எடுப் போர் என யாரேனும் தடயத்தை மாற்ற செய்த சூழ்ச்சியா என பொதுமக்கள் மத்தியில் பல கேள்விகள் எழுகிறது கடந்த வாரம் பஞ்சம்தாங்கி மலையில் ஏற்பட்ட காட்டுத்தீயை கண்டமனூர் வனச்சரகர் ரேஞ்சர் ஆறுமுகம் தலைமையில் வனத்துறையினர் தீயை கட்டுப்படுத்தினர். தொடர்ந்து ஏற்பட்ட தீ விபத்தால் பல ஏக்கர் அளவுள்ள அரியவகை மரங்களும் சேதமடைந்து இருக்கும் எனவும் வன விலங்குகளும் இறந்திருக்க கூடும் எனவும் அஞ்சப்படுகிறது. இம்மலை வழியாக கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு மாவோயிஸ்டுகள் ஊடுருவி சிங்கராஜ புரம் ஊராட்சி மேலை பூசணி யூத்து கிராமத்தில் கரும்பு தோட்டத்தில் வைத்து துப்பாக்கி சூடு நடத்தி வருஷநாடு காவல் துறையினர் தனிப்பிரிவு காவலர் முருகன் ஆகியோர் கைது செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இது போன்று மாவோயிஸ்டுகள் ஊடுருவல் உள்ளதா எனவும் காட்டு தீ வைத்த மர்ம நபர்களை பற்றி விசாரித்து காட்டுத் தீயை கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட வனத்துறையினர் நடவடிக்கை எடுத்து அச்சத்தில் உள்ள இப்பகுதி பொதுமக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். என கோரிக்கை வைக்கின்றனர்.

# ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் ஏலம் நடைபெறாததால் விவசாயிகள் சாலை மறியல் போலீசார் பேச்சு வார்த்தை



விக்கிரவாண்டி, செப்டம்பர் 02 2021: விக்கிரவாண்டி ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொள்ளாததை கண்டித்து விவசாயிகள் சாலை மறியல் போராட்டம். போலீசார், அதிகாரிகள் சமாதானம். விக்கிரவாண்டி ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு நேற்று விவசாயிகள் தங்களது விவசாய விளை பொருட்களை விற்பனைக்கு கொண்டு வந்தனர். அனைத்து விளை பொருட்களும் சேர்த்து 100 லாட்டுகள் (குவியல் எண்கள்) வந்திருந்தது. வியாபாரிகள் குடோனில் இருப்பு வைத்திருந்த எள் மூட்டைகள் திருடு போய் விட்டது என கூறி பகல் 12 மணிக்கு நடைபெற வேண்டி ஏலத்தை, வியாபாரிகள் புறக்கணிப்பு செய்தனர்.

பிற்பகல் 2 மணி வரையும் வியாபாரிகள் விலை நிர்ணயம் செய்து ஏலத்தில் கலந்து கொள்ளாததை கண்டித்தும், ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட பொருட்களுக்கு நீண்ட நாட்களாக பணம் தராமல் இழுத்தடிப்பதை கண்டித்தும் விவசாயிகள் பிற்பகல் 2.10 மணிக்கு திருச்சி—சென்னை சாலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தகவலறிந்த விக்கிரவாண்டி போலீஸ் இன்ஸ்பெக்டர் வினாயக முருகன், சப்—இன்ஸ்பெக்டர் பரணிநாதன், சிறப்பு சப்ரூ இன்ஸ்பெக்டர் சங்கரவடிவேல் ஆகியோர் கொண்ட குழுவினர் விவசாயிகளிடம் பேச்சு வார்த்தை நடத்தி சமாதானம் செய்ததால் 15 சாலை மறியல் போராட்டம் கைவிடப்பட்டது.

பின்னர் விற்பனை குழு செயலாளர் கண்ணன் ,போலீஸ் இன்ஸ்பெக்டர் வினாயக முருகன், சப் — இன்ஸ்பெக்டர் பரணிநாதன், கண்காணிப்பாளர் ஜாக்குலின் மேரி ஆகியோர் வியாபாரிகள் பிரதிநிதி வரதப்பிள்ளையிடம் பொருள் காணாதது குறித்து பேச்சு வார்த்தையை ரகசியமாக நடத்தினர்.

இறுதியில் மாலை 5.30 மணிக்கு வியாபாரிகள் விவசாயிகளின் விளை பொருட்களுக்கு விலைநிர்ணயம் செய்தனர்.

நிருபர்கள் புறக்கணிப்பு : வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொள்ளாதது குறித்து தனி அறையில் விற்பனை குழு செயலாளர் கண்ணன் விசாரணை நடத்தினார். போலீசார் மற்றும் விற்பனை கூட அதிகாரிகள், வியாபாரி பிரதிநிதி ஆகியோர் விசாரணையில் பங்கேற்றனர். அப்போது அங்கு சென்ற நிருபரை செயலாளர் கண்ணன் வெளியே போங்கள் என கூறிவிட்டு விசாரணையை துவக்கினார். நிருபர்கள் புறக்கணிப்பு செய்வதை செயலாளரிடம் கண்டனம் தெரிவித்தனர். போலீசார் தெரியாமல் நடந்து விட்டது என கூறி சமாதானம் செய்தனர். விற்பனை கூடத்தில் நடந்த திருட்டு குறித்து ரகசிய விசாரணை நடந்தது.

இதற்கு அதிகாரிகள் தரப்பில் விவசாயிகளுக்கு பணம் தராததை கேட்டதிற்கு வியாபாரி தனது எள் மூட்டையை காணவில்லை என பொய் புகார் தெரிவிக்கின்றார் என கூறினர் .இதற்கு வியாபாரிகள் தங்கள் எள் மூட்டை காணவில்லை என்பது உண்மை என எதிர்ப்பை அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.

விக்கிரவாண்டி ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் ஏலம் நடைபெறாததை கண்டித்து சாலை மறியல் போராட்டம் செய்த விவசாயிகளிடம் சப் — இன்ஸ்பெக்டர் பரணிநாதன் பேச்சு வார்த்தை நடத்தினார்.

# தென் தமிழகத்தில் முதன்முறையாக இரு இளம் பெண்களுக்கு திருநங்கைகளுக்கான அறுவைசிகிச்சை செய்து மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை சாதனை - முதல்வர் ரத்னவேல் அறிக்கை



மதுரை, செப்டம்பர் 02 2021: தென் தமிழகத்தின் முக்கிய மருத்துவமனையாக கருதப்படும் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் திருநங்கைகளுக்கான பன்னோக்கு உயர்சிகிச்சை மருத்துவ பிரிவு தொடங்கப்பட்டு செயல்பட்டுவருகிறது. இதில் ஏராளமான திருநங்கைகளுக்கு அறுவைசிகிச்சை செய்யப்பட்டுவருகிறது. இந்நிலையில் இந்த சிறப்பு வார்டில் மதென் தமிழகத்தில் முதன்முறையாக திருநம்பிகளுக்கான அறுவைசிகிச்சையை மருத்துவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

மதுரையை சேர்ந்த இரு பட்டதாரி இளம்பெண்கள் தோற்றத்தில் திருநம்பிகளாக இருந்துவந்த நிலையில் இருவருக்கும் மாற்று பாலினத்தவர்களுக்கான அறுவை சிகிச்சையை மேற்கொண்டு திருநம்பிகளாக மாற்றி மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை சாதனைபடைத்துள்ளது. அறுவை சிகிச்சை முடிவடைந்து தற்போது இருவரும் உடலளவிலும் மனதளவிலும் ஆரோக்கியமாக உள்ளனர் என மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை முதல்வர் ரத்னவேல் தனது செய்தி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இதேநிலையில் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் உள்ள திருநம்பி / திருநங்கைகளுக்கான சிறப்பு மருத்துவ பிரிவில் வரும் நாட்களில் வியாழன்தோறும் புறநோயாளிகள் பிரிவு செயல்படும் எனவும், இந்த பிரிவில் தற்போது 37 திருநங்கை மற்றும் திருநம்பிகள் உளவியல் மற்றும் ஹார்மோன் சிகிச்சையில் உள்ளனர் எனவும் 10பேர் மூன்றாம் பாலின அறுவைசிகிச்சைக்கு தயார் நிலையில் உள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த சிறப்பு சிகிச்சை பிரிவில் செயற்கை மார்பகம், உறுப்பு பொறுத்துதல், குரல்மாற்றம், லேசர் மூலம் முடி நீக்கம் போன்ற சிகிச்சைகள் மேற்கொள்ள உள்ளதாகவும் தெரிவித்துள்ள டீற் ரத்னவேல், திருநம்பிகளுக்கான அறுவை சிகிச்சைகளை சிறப்பாக மேற்கொண்ட அகச்சுரப்பியல் துறை தலைவர் ஸ்ரீதர் தலைமையிலான மருத்துவகுழுவினருக்கு தனது பாராட்டுகளையும் தெரிவித்துள்ளார்.

# குமரி மாவட்டத்தில் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் திறக்கப்படும் நிலையில் முன்னேற்பாடு பணிகளை பள்ளி கல்வித்துறை இணை இயக்குனர் ராமசாமி ஆய்வு செய்தார்



கன்னியாகுமரி, செப்டம்பர் 02 2021: தமிழகத்தில் கொரோனா இரண்டாவது அலை பரவல் காரணமாக கடந்த பல மாதங்களாக பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டன. எனினும் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டு விடக்கூடாது. என்பதற்காக ஆன்லைன் மூலம் வகுப்புகள் நடந்தன. இந்த நிலையில் தற்போது கொரோனா பரவல் கட்டுக்குள் வந்ததால் கல்வி நிறுவனங்கள் செப்டம்பர் 1-ஆம் தேதி திறக்கப்படும். என்று முதல்வர் மு க ஸ்டாலின் அறிவித்தார்.

இதில் பள்ளிகளை பொருத்தவரை 9 வகுப்பு முதல் பன்னிரண்டாம் 6 வரை ஆறு நாட்கள் வகுப்புகள், நடத்த வேண்டும். ஒவ்வொரு வகுப்பறையிலும் 20 மாணவர்கள் மற்றும் சமூக இடைவெளியுடன் பின்பற்றி அமர வைக்க வேண்டுமென்ற உத்தரவை அரசு பிறப்பித்தது. அதோடு மாணவர்கள் கட்டாயம் முக கவசம் அணிய வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது நாள்தோறும் உடல் வெப்பநிலை கண்காணித்து அதை உரிய பதிவேட்டில் பராமரிக்கவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது முக்கியமாக ஆசிரியர்கள் கட்டாயம் இரண்டு தடுப்பூசிகள் செலுத்தி இருக்க வேண்டும். என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பல்வேறு கட்டுப்பாடுகளை கடைப்பிடித்து தமிழகம் முழுவதும் பள்ளிகள் கல்லூரிகள் திறக்கப்பட உள்ளன. இதேபோல குமரி மாவட்டத்திலும் பள்ளிகள் கல்லூரிகள் செயல்பட இருக்கின்றன. குமரி மாவட்டத்தை பொருத்தவரையில் 480 க்கும் மேற்பட்ட பள்ளிகள் 9 வகுப்பு முதல் 12 வகுப்புவரை ஒரு லட்சத்துக்கும் அவர்கள் அனைவரும் பள்ளிக்கு வருகை தர உள்ளனர்.

# கல்வி தொலைக்காட்சி பார்த்து ஆர்வத்துடன் பாடங்களை படிக்கும் மாணவர்கள்



சிவகங்கை, செப்டம்பர் 02 2021: சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளி மாணவர்கள் கல்வி தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பு செய்யப்படும் பயிற்சி பாடங்களை ஆர்வத்துடன் பார்த்து படித்து வருகிறார்கள்.

தமிழகம் முழுவதும் கரோனா ஊரடங்கால் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விடுமுறை தொடர்ந்து நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கல்வி தொலைக்காட்சிகள் மூலம் மாணவ, மாணவிகளுக்கு வகுப்புகள் நடத்தப்படுகிறது. இதுதொடர்பாக மாணவ, மாணவிகள், பெற்றோர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்கள் பெற்றோர்களிடம் ஒளிபரப்பாகும் நேரங்களை தாளில் எழுதி கொடுத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். மேலும் மாணவர்களுக்கு தொலைபேசி மூலமும் , நேரிலும் வீடு,வீடாக சென்று தொடர்பு கொண்டு கல்வி தொலைக்காட்சி பார்க்க சொல்லியும் வலியுறுத்தி கூறி வருகிறார்கள். இதன் தொடர்ச்சியாக பெரும்பாலான மாணவர்கள் தொடர்ந்து கல்வி தொலைக்காட்சியை பார்த்து பயிற்சிகளை செய்து வருகின்றனர்.

பள்ளி தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம் கூறும்போது, மாணவர்கள் ஆர்வத்துடன் கல்வி தொலைக்காட்சியில் பாடங்களை பயின்று பதில் அளித்து வருகின்றனர்.எங்கள் பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களை தொலைபேசி வழியாக தினமும் காலையில் தொடர்பு கொண்டு கல்வி தொலைக்காட்சியை பார்த்து பயிற்சிகளை செய்து முடிக்குமாறு வலியுறுத்தி வருகின்றனர்.மாணவர்களின் சந்தேகங்களுக்கும் விளக்கங்கள் அளித்து வருகின்றனர். பல பெற்றோர்கள் அலைபேசி வழியே தொடர்பு கொண்டு தொலைகாட்சி நிகழ்ச்சிகள் குறித்து சந்தேகங்களை கேட்டு தெளிவுபடுத்திகொண்டு வருகின்றனர்.என்றார்.

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளி மாணவர்கள் வீட்டிலிருந்தபடியே கல்வி தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பு செய்யப்படும் பயிற்சி பாடங்களை ஆர்வத்துடன் பார்த்து படித்து வருகிறார்கள்.

# முன்னாள் அமைச்சர் சிவி. சண்முகம் கைது செய்ததை கண்டித்து அ.தி.மு.க., வினர் சாலை மறியல்



விக்கிரவாண்டி, செப். 02 2021: விக்கிரவாண்டியில் முன்னாள் அமைச்சர் சண்முகம் கைது செய்ததை கண்டித்து அ.தி.மு.க., வினர் சாலைமறியல் போராட்டம் .அ.தி.மு.க., வினர் 52 பேர் கைது.

விழுப்புரத்தில் ஜெ. பல்கலைகழகம் பெயர் மாற்றத்தை கண்டித்து விழுப்புரத்தில் முன்னாள் அமைச்சர் சண்முகம் தர்ணா போராட்டத்தில்

ஈடுபட்டார். அவரையும் , கட்சி தொண்டர்களையும் போலீசார் கைது செய்தனர். இதை அறிந்த விக்கிரவாண்டி நகர, ஒன்றிய அ.தி.மு.க., நிர்வாகிகள்

முன்னாள் அமைச்சர் சண்முகத்தை விடுதலை செய்யக்கோரியும், ஜெ., பல்கலைகழகம் பெயர் மாற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும் விக்கிரவாண்டி

வடக்கு பைபாஸ் முனையில் மாவட்ட பிரதிநிதி தொரவி சுப்ரமணி, மாநில பொதுக்குழு உறுப்பினர் லட்சுமி நாராயணன், ஒன்றிய துணை செயலாளர்கள் நாகப்பன், குமார், முன்னாள் மாவட்ட பாசறை செயலாளர் குமாரராஜா, அணி நிர்வாகிகள் கோபால கிருஷ்ணன், ரவி,பெரியான், துரைமுருகன் , ராதாகிருஷ்ணன், ஸ்ரீதர் ,சிவகாமி லட்சுமணன், பலராமன், கண்ணன், வழக்கறிஞர் பிரகாஷ், மாணிக்கவேல், லட்சுமணன், கோவிந்தராஜ், ஆசிரியர் பேரவை மாநில செயலாளர் ஜார்ஜ் உட்பட கட்சி நிர்வாகிகள் பலர் சாலை மறியல் போராட்டம் நடத்தினர். இதனால் சென்னைரூதிருச்சி சாலையில் அரை மணி நேரம் போக்கு வரத்து பாதிப்பு ஏற்பட்டது.

சாலைமறியலில் ஈடுபட்ட கட்சியினரை சப்ரூ இன்ஸ்பெக்டர் பரணிநாதன், நெடுஞ்சாலை ரோந்து சிறப்பு சப்ரூ இன்ஸ்பெக்டர் அய்யனாரப்பன், தனிப்பிரிவு சிறப்பு சப்ரூஇன்ஸ்பெக்டர் சங்கரவடிவேல் ஆகியோர் கைது செய்து தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைத்து பின்னர் மாலையில் விடுதலை செய்தனர். விக்கிரவாண்டி வடக்கு பைபாஸ் முனையில் முன்னாள் அமைச்சர் சண்முகம் கைதை கண்டித்து அ.தி.மு.க., வினர் சாலை மறியல் போராட்டம் நடத்தினர்.

# பள்ளி - கல்லூரி செல்லும் மாணவர்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வாழ்த்து! கொரோனா பாதுகாப்பு வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடிக்கவும் வேண்டுகோள்!!

மதுரை, செப்டம்பர் 02 2021: கொரோனா தொற்றுப்பரவல் காரணமாக கடந்த ஒன்றரை ஆண்டுகளாக திறக்கப்படாத பள்ளி மற்றும் கல்லூரிகளை தற்போது உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளோடு திறப்பது எனவும், வகுப்பறைகளில் 50 சதவிகித மாணவர்களை மட்டுமே சுழற்சி முறையில் அனுமதிப்பதெனவும் தமிழக அரசு முடிவு செய்துள்ளது. மேலும் மாணவர்கள் கட்டணமின்றி அரசுப் பேருந்துகளில் பயணம் செய்யலாமென்ற அறிவிப்பும் தமிழக அரசின் சார்பில் வெளியிடப்பட்டுள்ளது. இதை வரவேற்பதோடு, பள்ளிக் கூடங்களில் கழிப்பறை போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்திட தமிழக அரசை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக் கொள்கிறது.

நீண்ட நாட்களுக்கு பிறகு பள்ளி, கல்லூரிகளுக்கு செல்லும் மாணவர்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். மாணவர்கள் முகக் கவசம் அணிவது, தனி மனித இடைவெளியை பின்பற்றுவது உள்ளிட்ட இதர பாதுகாப்பு வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றிட ஆசிரியர்களும், பெற்றோர்களும் உரிய கவனம் செலுத்திட கேட்டுக் கொள்கிறோம். மாணவ - மாணவியர்கள் கூடுதல் அக்கறை செலுத்தி கல்வி பயின்று எதிர்காலத்தை வளமாக்கிக் கொள்ள வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக் கொள்கிறது.

Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

HELLO Mirror MADRAS
hellomadrasdaily@gmail.com
R.DIS No: 60/2021
Daily Morning Newspaper
The Truth

KARUNAII TRUST
Contact : 98413 59935

VOLUME - 1 | CHENNAI | DAILY | 4 Pages | Thursday, September 02, 2021 | Rs.2/- | ISSUE - 50

# Union Home & Cooperation Minister Amit Shah launched web portal for registration of units under 'New Central Sector Scheme' for Industrial Development of Jammu and Kashmir through video conferencing

New Delhi, September 02, 2021: The Union Minister for Home & Cooperation, Amit Shah launched the web portal for registration of units under the 'New Central Sector Scheme' for Industrial Development of Jammu and Kashmir through video conferencing in New Delhi today. Commerce and Industry Minister Shri PiyushGoyal, Minister of State for Science and Technology Jitendra Singh,Minister of State for Home, Nityanand Rai, Minister of State for Commerce and Industry, Somprakash, and Minister of State for Commerce and Industry, Smt. Anupriya Patel, Lieutenant Governor of Jammu and Kashmir Shri Manoj Sinha and Union Home Secretary were also present.

In his address, Amit Shah said that a new dawn of investmentand industrial development will begin in Jammu and Kashmir with the launch of this portal.

Amit Shah said that Prime Minister Narendra Modi ji had said that after the abrogation of Articles 370 and 35A, a new beginning of employment and prosperity will start in Jammu and Kashmir and the promise he made to the people of Jammu and Kashmir will be fulfilled, which is a big milestone.He said that this interactive web portal will attract investment of more than Rs. 50,000 crore in Jammu and Kashmir and will lead to inclusive, all-round development of the Union Territory.

He said that all complaints have already been addressed beforehand. He said that industrial development for India, good environment for it, and policy to compete with the world, is a hallmark of the Modi government. He said that today the most attractive industrial policy of the country is here.

The Union Home Minister said that the benefits of this did not reach Jammu and Kashmir, the youth here had to depend on government undertakings for employment. The biggest obstacle in this were Articles 370 and 35A, but after the abrogation of these Articles under the leadership of Narendra Modi on August 5, an open environment was created, and employment opportunities were created for Jammu and Kashmir. He said industrialists across the country also want the development of Jammu and Kashmir. He said industrialists from all over the country also want Jammu and Kashmir to be developed, by investing here, they would not only benefit themselves, but would also like to contribute to the development of Jammu and Kashmir. For this a policy was needed that would keep them in competition. He said that in GST, up to 300 percent refund has been given on plant and machinery and for a period of ten years. There is also a provision for interest subsidy and a revival package and the environment that will be created will bring many other ancillary industries to J&K.

Amit Shah said many provisions have been made for the already running industries, which they can take advantage of this, and he was sure that lakhs of youth will get employment.He said apart from tourism, education and IT in Jammu and Kashmir, this policy will also take forward many other possibilities.

Amit Shah said that the work of creating an environment of development




had started in Jammu and Kashmir from 2019. He said for the all-round development of Jammu and Kashmir, the Prime Minister had announced a package of Rs.80,068 crore in Srinagar on November 7, 2015, out of which 54 projects worth about Rs.58,627 crore have been started, out of which 17projects have been fully completed.7 new medical colleges and 5 new nursing colleges have been sanctioned in J&K and the number of medical seats has been almost doubled from 500. He said many hydroelectric projects have been started in Jammu and Kashmir, which will benefit industries as well as increase revenue. He said the 196 MW Ujh Hydroelectric Project worth Rs. 9,167 crore would irrigate about 31,380 hectares of land.With the development of agriculture, the income of the people will increase and the economy will be strong. He said the 1000 MW PakalDhul project is the biggest project in Kishtwar district at a cost of Rs. 8,120 crore and its work will be completed by December 2024 and will generate 3,330 million units of electricity annually.

Amit Shah said J&K has implemented One Nation, One Ration Card scheme, and Ujjwala, DBT, Saubhagya and many other schemes have been fully implemented in J&K. He said when the standard of living of an individual rises, his aspirations and expectations also increase and this creates a good environment for the economy.

He said the Prime Minister had made an ambitious plan, in which the target of providing clean drinking water to every household was set before 2022, and by August 15, 2022, the Government of Jammu and Kashmir will fulfill this target. The Union Home Minister said that Jammu and Kashmir is the only state where every person has received the benefit of the Pradhan Mantri Ayushman Bharat Yojana and so far 94,990 people have taken its benefit.He said that so far 56,000 new houses are being built under Pradhan MantriAwasYojana- Urban, out of which 10,500 houses have been given.

He said that under Pradhan Mantri Awas Yojana-Gramin, 1,36,722 houses have been approved, out of which 47,323 houses have been given. Amit Shah said that I want to tell those who say that what is the difference, that in 70 years the previous governments did not provide even basic facilities like houses, toilets and electricity and water to about 2,20,000 families of the state. But Prime Minister Shri Narendra Modi has provided all these necessary facilities to the people within 2-3 years. He said that while preparing this scheme, it has been kept in mind that those who set up industries in less developed areas will get more benefits so that there can be an all-inclusive and all-round development of Jammu and Kashmir from the point of view of industries.

# Telephone conversation between Prime Minister Narendra Modi and President of the European Council, Charles Michel

New Delhi, September 02, 2021: Prime Minister Shri Narendra Modi spoke on phone today with the President of the European Council, H.E. Charles Michel.

The leaders discussed the recent developments in Afghanistan and the implications for the region and the world. They unequivocally condemned the horrific terror attack at the Kabul International Airport that resulted in many casualties. They emphasized the importance of a stable and secure Afghanistan and discussed the potential role India and the EU could play in this context.

The two leaders agreed to remain in touch on



bilateral and global issues, in particular, the situation in Afghanistan.

# Raksha Rajya Mantri Ajay Bhatt to visit flood-affected areas in Uttarakhand tomorrow

New Delhi, September 02, 2021: Raksha Rajya Mantri Shri Ajay Bhatt reviewed the flood situation in Uttarakhand in a meeting with Director General Border Roads (DG BR), in New Delhi on August 31, 2021. Heavy monsoon rains triggered landslides that have blocked several highways.

Raksha Rajya Mantri Shri Ajay Bhatt inquired about the damage to Pithoragarh-Tawaghat road between kilometre 98 to 102 in a meeting with DG BR Lt General Rajeev Choudhary.

It is worth noting that catchment area of the Kali river at Dharchula have suffered damage due to cloudburst and incessant rains for the last 5-6 days.

Lt General Chaudhary apprised Shri Ajay Bhatt that along with BRO, National Disaster Relief Force and the entire team of local administration are engaged in relief and rescue operation to provide succour to the affected. The Raksha Rajya Mantri directed DG BR that in such difficult times, the BRO should make every effort to restore connectivity with all its might. The DG BRO assured him that BRO will provide all possible help to the state government in the border areas.

Raksha Rajya Mantri is reaching Dharchula on September 01, 2021 along with DG BR Lt General



Rajeev Chaudhary and MP Shri Ajay Tamta on a one-day visit to take stock of the flood situation first-hand in affected areas of the state.

Raksha Rajya Mantri is reaching Dharchula on September 01, 2021 along with DG BR Lt General Rajeev Chaudhary and MP Shri Ajay Tamta on a one-day visit to take stock of the flood situation first-hand in affected areas of the state.

# EPL Partners With Colgate-Palmolive For Creation of First-Ever Recyclable Toothpaste Tubes

Chennai, September 02, 2021: EPL Limited (formerly Known as Essel Propack Limited), the world's largest specialty packaging company, today announced that they have partnered with Colgate-Palmolive India, one of the largest oral care brands to produce Recyclable Platina Toothpaste Tubes in India. This first set of recyclable tubes is the starting point for converting to 100% recyclable tubes for Colgate-Palmolive.

EPL, market leader in the tube packaging sector, is committed to bringing world-class tube packaging innovation to address growing requirements of customers on sustainability. EPL has innovated the first-of-its-kind Recyclable Platina Tubes for Colgate-Palmolive, keeping in mind superior




functionality and no-compromise on key product attributes and efficacies. .

EPL is grateful to partner with Colgate-Palmolive which is the first oral care brand in India to launch such an initiative nationally. This innovation was enabled via EPL's Association of Plastic Recyclers, USA(APR) approved 100% recyclable and fully recyclable Platina Tubes to pack Colgate Active Salt and Colgate Vedshakti, with other brands in the portfolio to follow.

Speaking on this occasion, Deepak Ganjoo, President AMESA, EPL Limited, said, "We are proud partners to Colgate-Palmolive India for many decades and the relationship has enabled us to create path-breaking firsts which are visible via such first-ever conversions to recyclable tubes. Going ahead, we believe, sustainability is the cornerstone of packaging innovation and EPL is leading the pack globally on sustainable packaging. In line with brand requirements and our vision towards a net zero impact on our environment, we are committed to partnering with all the brands to offer innovative Sustainable tube packaging solutions."

EPL's Platina, an eco-friendly laminated tube, is designed to deliver source reduction and recyclability without the loss of any barrier properties. This allows for sustained product stability and durable shelf life of the packed content. Platina tube is especially suited for oral and beauty & cosmetics products. Platina tubes and caps are certified as 100 per cent recyclable by The Association of Plastic Recyclers (APR) and RecyClass European certification for 'Code 2' (recycling), making it the first speciality packaging tubes and caps to be recognised as 100 percent recyclable, globally.

# CCI approves acquisition by T.S. Rajam Rubbers and Dhinrama Mobility Solution of certain shareholding in TVS Supply Chain Solutions

New Delhi, September 02 2021: The Competition Commission of India (CCI) approves acquisition by T.S. Rajam Rubbers Private Limited (Acquirer 1) and Dhinrama Mobility Solution Private Limited (Acquirer 2) of certain shareholding in TVS Supply Chain Solutions Private Limited (Target) under Section 31(1) of the Competition Act, 2002.

The proposed transaction entails an acquisition of additional shareholding of Target by Acquirer 1 and Acquirer 2 (collectively Acquirers). The proposed transaction will be carried out through a secondary purchase from CDPQ Private Equity Asia Pte. Ltd. (CDPQ).

The Acquirers are wholly owned subsidiaries of TVS Mobility Private Limited, which is owned and controlled by Shri TS Rajam Family. The TS Rajam Family members are the promoters of the Target.

Target is an unlisted public company and along with its affiliates, it is engaged in provision of logistics/supply chain solutions services in India and abroad.

Detailed order of the CCI will follow.

# Union Minister Emphasises On The Importance Of 'Women Led Development' As Envisioned By Prime Minister, Narendra Modi

New Delhi, September 02, 2021: Minister for Women and Child Development Smt. Smriti Zubin Irani chaired the National Conference, 2021, which was held on the 30th and 31st of August atKevadia, Gujarat, and was attended by Dr MahendrabhaiMunjpara, Minister of State for WCD and Ministers from various States, as well as Principal Secretaries of States/ UTs Women and Child Development / Social Welfare Department. The National Conference was a platform to discuss and deliberate on better implementation and governance of schemes and programmes of the Ministrynamely, the new initiatives on the three key missions: Mission Poshan 2.0, Mission Vatsalya, and Mission Shakti were discussed in detail.

The key event began on August 31st, 2021, with a tribute to the 'LauhPurush' of India, the great visionary, Sardar Vallabhbhai Patel, at the Statue of Unity by the Union Minister, WCD. Thiswas followed by planting of nutri-fruit saplings at Mahila Evam Bal Sashaktikaran Van, by the WCD Ministers of all States and UTs to exemplify the vision of 'Ek Bharat Shreshth Bharat,' and to promote plantation of PoshanVatikas / Nutri-gardens all over the country.

During the conference, presentations on the three key Missions and Global Indices were made by the senior officers of the Union Ministry. Furthermore, the Chairpersons of NCPCR and NCWalso presented their perspectives on child rights and women empowerment.The State representatives actively participated in the deliberations and provided their valuable inputs and suggestions.

Later in the day, Smt. Smriti Zubin Irani, Union Minister for Women and Child Development, delivered the keynote address, sharing her vision for the future of women and children of India. The Union minister while expressing her ideas about Mission Poshan 2.0, mentioned that Poshan Maah 2021 was going to commence from 1st September 2021. She urgedall the State governments to participate in it wholeheartedly and decide on their own the targets for developing PoshanVatikas; carrying out drives for identification and follow-up treatment of SAM children in consonance with Streamlined guidelines of




13thJanuary,2021.She also requested the States to improve the infrastructure of AWCs andsaturate the supply of mobile phones and GMDs during the month.

While elaborating on Mission Vatsalya, the Cabinet Minister, WCD emphasised the importance of recent amendments in Juvenile Justice (JJ) Act. She expressed that it would increase the accountability of DC/DMs and would facilitate reintegration of vulnerable children into the society. She requested the representatives of State governments to provide their views and suggestions for Rules to be framed under JJ Amendment Act.

The Union Ministerstressed on the importance of 'Women Led Development' as envisioned by Prime Minister, Shri Narendra Modi. She suggested that we could think of developing a convergent modelfor providing Working Women Hostels (WWH) for women and young girls who migrate to different States for employment. She dwelt upon the importance of Mission Shakti and emphasising upon the importance of One Stop Centres,requested States toopen One Stop Centres in the remaining districts of thecountry.

Dr. MahendrabhaiMunjpara, Minister of State in the Ministry of Women and Child Development, also shared his views at the event. The Conference with States/UTs exemplified the true spirit of our federal structure, resulting in coordinated and convergent efforts for the development and welfare of the country's women and children.

Owned & Pubilshed by R.SATHYANARAYANAN from No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 26, and printed by him at chennai offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-2, Editor: R.SATHYANARAYANAN, Email: hellomadrasdaily@gmail.com. Contact: 8148231942. Subject to Chennai Court Jurisdiction